பக்கங்கள்: 07

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 18 சனிக்கிழமை 30.04.2022 கதிர் 70

### வாவியில் மூழ்கி

## சகோதரர்கள் இருவர் சாவு!

வாவியில் குளிக்கச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் வாரியபொல, குருணவ பிரதேசத்தில் நேற்று மாலை ☞2

# இடைக்கால அரசுக்குச் சந்தர்ப்பம் இல்லை; பிரதமர் பதவியிலிருந்தும் விலகமாட்டேன்!



### மஹிந்த மீண்டும் திட்டவட்ட அறிவிப்பு

நாட்டின் தற்போதைய நெருக்கடிக்கு இடைக்கால அரசு தீர்வு அல்ல. அப்படிப்பட்ட அரசு தற்போது அமையவும் சந்தர்ப்பம் இல்லை.

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தம்மிடம் நேற்றிரவு உறுதியளித்தார் என்று அவரின் சகாவும் முன்னாள் அமைச்சருமான ரோஹித அபேகுணவர்தன எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

மகாசங்கத்தினர் எந்த நிலைப்பாட்டை எடுத்தாலும் பிரதமர் பதவியிலிருந்து தான் ஒருபோதும் விலகமாட்டேன் என்றும், மக்கள் ஆணையின் பிரகாரம் அந்தப் பதவியிலிருந்து ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஆட்சியை முன்நகர்த்துவேன் என்றும் பிரதமர் எம்மிடம் குறிப்பிட்டார். ☞2

# மக்கள் போராட்டத்தை இல்லாதொழிக்க கோட்டா போட்ட முடிச்சே இடைக்கால அரசு

### விடுதலைக்கான பேரணியில் சஜித் விளாசல்



**ராஜபக்ஷக்கள் உள்ளிட்ட அரசு வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்றே நாட்டு மக்களும் போராடும் மக்களும் கோருகின்றனர். இந்நிலையில், இடைக்கால அரசு என்ற குண்டைக் கொண்டு வந்தது ஒரு சதியாகும்.**

**- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

**மக்கள் போராட்டத்தைத் தோற்கடிக்க - அந்தப் போராட்டத்தை இல்லாதொழிக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ஒரு குழுவினரால் கொண்டுவரப்பட்டுள்ள இந்த இடைக்கால அரசு என்ற கயிற்றில் ஐக்கிய மக்கள் சக்தியின் எந்தவொரு உறுப்பினரும் சிக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.** ☞2

# நாடாளுமன்றத்தில் மே 4ஆம் திகதி பெரும்பான்மையை நிரூபிப்போம்!

### எதிரணி பிரதம கொறடா உறுதி



எதிர்வரும் 4ஆம் திகதி நடைபெறவுள்ள பிரதி சபாநாயகருக்கான தேர்வின்போது எதிரணி பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் நிரூபிக்கும்.

- இவ்வாறு எதிரணி பிரதம கொறடாவான ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இதுதொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது-

19 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாகச் செயற்படுத்துமாறு மகாநாயக்க தேரர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆனால், 20 ஐ நீக்குவதற்கு ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டத்தில் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். இப்படியானவர்களுடன் ☞2


## மருந்துப் பொருள்களின் விலைகளும் அதிகரிப்பு

நாட்டில் மருந்துப் பொருள்களின் விலைகள் 40 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விலை அதிகரிப்பின் மூலம் ☞2

## மாணவர்களை இலக்குவைத்து போதைப்பொருள் வியாபாரம்!



கல்முனை பிரதேசத்தில் மாணவர்களை இலக்கு வைத்து நடத்தப்படும் போதைப் பொருள் விற்பனையை முற்றாக இல்லாதொழிக்கும் வகையில் ☞2

## முதலில் கோட்டாபய வீட்டுக்குப் போகட்டும்

### ராஜித வலியுறுத்து



நாட்டின் தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வுகாண இடைக்கால அரசு தேவையில்லை. புதிய அரசே வேண்டும். அதற்கு முன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியைத் துறந்துவிட்டு வீட்டுக்குச் செல்ல வேண்டும்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் ☞2

## இந்தியா செல்ல முற்பட்ட 13 பேர் காங்கேசன்துறைக் கடலில் கைது



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறைக் கடற்பரப்பின் ஊடாக இந்தியா செல்ல முற்பட்ட 13 பேர் காங்கேசன்துறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலையைச் சேர்ந்த 5 ஆண்கள் , 5 பெண்கள் மற்றும் 3 சிறுவர்கள் உள்ளடங்கலாக 13 பேரே நேற்றிரவு இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட 13 பேரையும் கடற்படையினர் கடற்படை முகாமில் தடுத்துவைத்து விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில், மேலதிக ☞2

## மாணவர்களை இலக்குவைத்து ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விசேட ரோந்து நடவடிக்கைகளில் சாய்ந்தமருது, கல்முனைப் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கேரளக் கஞ்சா, ஹெரோயின் மற்றும் மாவா போதைப் பொருள்களின் விற்பனை அதிகரித்துள்ளது எனப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளதைத் தொடர்ந்தே இந்தத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிராமங்களிலுள்ள பொது அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள், வழிபாட்டுத் தலங்களின் ஊடாக பொதுமக்கள் மத்தியிலும் போதைப்பொருள் சம்பந்தமான விழிப்பூட்டும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பொலிஸார் கடந்த மாதம் தொடக்கம் போதைப்பொருள் பாவனையை கல்முனை பிரதேசத்திலிருந்து முற்றாக ஒழிக்கும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

பொலிஸார் சிவில் உடையிலும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் பாடசாலைகளுக்கு அருகிலுள்ள கடைகள் மற்றும் நடமாடும் உணவு விற்பனை வியாபாரிகளும் பொலிஸாரால் கண்காணிக்கப்பட்டு வருகிறேன் என சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எல் சம்சுதீன் தெரிவித்தார்.

## நாடாளுமன்றத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எப்படி இடைக்கால அரசை முன்னெடுப்பது?

எதிரணிக்குரிய பொறுப்பை நிறைவேற்றவே மக்கள் எமக்கு ஆணை வழங்கியுள்ளனர். எனவே, இடைக்கால அரசில் இணைய வேண்டிய தேவை எமக்கு கிடையாது.

நாடாளுமன்றத்தில் அரசு பெரும்பான்மைப் பலத்தை இழந்துவிட்டது. எதிரணிப் பக்கம்தான் பெரும்பான்மைப் பலம் உள்ளது. எதிர்வரும் 4ஆம் திகதி அதனை நிரூபிப்போம் - என்றார்.

## முதலில் கோட்டாபய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன வலியுறுத்தினார்.

புதிய பிரதமருடன் இடைக்கால அரசுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துள்ளார் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று தெரிவித்திருந்தார். இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இடைக்கால அரசுக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் ஆதரவு வழங்காது. இதை எமது கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ பகிரங்கமாகத் தெரிவித்துவிட்டார்.

அரசிலிருந்து வெளியேறிச் சுயாதீனமாகச் செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவும் தனது பதவியைத் தக்க வைப்பதற்காகவுமே இடைக்கால அரசு அமைய ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருக்கலாம்.

ஜனாதிபதி விரும்பும் புதிய பிரதமர் யார்? அண்ணனை (மஹிந்த ராஜபக்ஷ) பிரதமர் பதவியிலிருந்து தான் விலகச் சொல்லவில்லை என்று தெரிவித்த கோட்டாபய, எப்படி புதிய பிரதமரை நியமிக்கப் போகின்றார்?

எனவே, நாட்டின் தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வுகாண இடைக்கால அரசு தேவையில்லை. புதிய அரசே வேண்டும். அதற்கு முன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியைத் துறந்துவிட்டு வீட்டுக்குச் செல்ல வேண்டும். அப்போதுதான் புதிய அரசு சுதந்திரமாகச் செயற்பட முடியும்.

தற்போதைய அரசை நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் தோற்கடித்துவிட்டு ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் புதிய அரசை நாம் நிறுவுவோம் - என்றார்.

## இந்தியா செல்ல ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விசாரணைகளுக்காகப் பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## மருந்துப் பொருள்களின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பரசிட்டமோல், அட்டோவாஸ்டடின், எனலாபிரில், அஸ்பிரின் உள்ளிட்ட 60 மருந்துப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

2015ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை சட்டத்தின் கீழ் இந்த விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்கள் போராட்டத்தை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அடக்குமுறை அரசுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் கண்டியில் ஆரம்பிக்கப்பட்ட விடுதலைக்கான பேரணி ஐந்தாம் நாளான இன்று கொழும்பை நோக்கி வந்துகொண்டிருக்கின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்ட இலட்சக் கணக்கான மக்கள் இந்தப் பாத யாத்திரையில் கலந்துகொண்டுள்ளனர்.

யக்கலையில் நேற்று மாலை நான்காம் நாள் நடைபயணத்தை நிறைவு செய்து உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இடைக்கால அரசு தொடர்பில் சிலர் பரப்பிய நாடகத்தின் உண்மை இன்று அம்பலமாகியுள்ளது.

அரசு அச்சாறாகிட்டது. அச்சாறாகியுள்ள ஆட்சியில் இடைக்கால அரசை அமைப்பதற்கோ அல்லது பங்காளிகளாகுவதற்கோ ஐக்கிய மக்கள் சக்தி தயாரில்லை. இந்த நாடகம் குறித்து ஆரம்பத்திலேயே நான் அறிந்திருந்தேன்.

எதிர்க்கட்சித் தலைமைப் பதவியோ அல்லது அதற்கு அப்பாலான பெரிய பதவிகளோ எனக்கு ஆபரணங்கள் இல்லை.

அந்தப் பதவிகளுக்கு அடிபணிந்து மக்கள் போராட்டத்தைக் காட்டிக்கொடுக்கப் போவதில்லை.

மக்களின் போராட்டங்கள் மற்றும் அவர்களின் கோரிக்கைகளைச் சலுகைகளுக்காக காட்டிக்கொடுக்கும் பழக்கம் ஐக்கிய மக்கள் சக்திக்கு இல்லை.

ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டமானது, இந்நாட்டு மக்களுக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுக்கும்.

இன்று சிலர் நிதி சலுகைகளை வழங்கி, அரசை அமைக்க முயற்சித்தாலும், ஐக்கிய மக்கள் சக்தி அல்லது ஐக்கிய மக்கள் கூட்டணியிலுள்ள எந்தவொரு உறுப்பினரும் இவ்வாறான சலுகைகளை நம்பி ஏமாறமாட்டார்கள் - என்றார்.

## இடைக்கால அரசுக்குச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடாளுமன்றத்தில் 113 இற்கும் மேற்பட்டோரின் ஆதரவு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசுக்கு இருக்கின்றபோது பிரதமர் பதவியை எப்படி இராஜிநாமா செய்ய முடியும் என்றும் பிரதமர் எம்மிடம் கேள்வி எழுப்பினார்.

பிரதமரின் இந்த நிலைப்பாட்டை நாம் வரவேற்கின்றோம். அவர் அரசமைப்பை மீறிச் செயற்படவில்லை. மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து அரசமைப்பின் பிரகாரமே அவர் செயற்படுகின்றார். குறுக்கு வழியில் பிரதமரைப் பதவியிலிருந்து விலக்கிவிட்டு ஆட்சியமைக்கத் துடிப்போர் இதைக் கவனத்தில்கொண்டு செயற்பட வேண்டும் - என்றார்.

எனினும், நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கி சர்வகட்சி அரசை அமைப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பின்னர் ஆளும் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்திய - தற்போது சுயாதீனமாகச் செயற்படும் கட்சித் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சகோதரர்கள் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர்கள் 43 மற்றும் 34 வயதுடைய சகோதரர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், உயிரிழந்தவர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக வாரியபொல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

இறைச்சிக் கோழி விற்பனை
புறொய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500



கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi


சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL


FULL OPTION

MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE

BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வருகிறது வரி உயர்வு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் மோசமான கொள்கைப் போக்கினால், அதன் நிர்வாகச் சீர்கேட்டினால், தீர்க்கதரிசனமற்ற பொருளாதார நடவடிக்கைகளினால் நாடு மிகப்பெரிய நெருக்கடியை 2022 ஆம் புத்தாண்டை அடுத்து எதிர் கொள்ளப் போகின்றது என்று கடந்த ஆண்டு நடுப்பகுதியில் இருந்தே இந்தப் பத்தியில் திரும்பத் திரும்பப் பல தடவைகள் சுட்டிக்காட்டி வந்தோம். வருட ஆரம்பத்தில் நெருக்கடியின் முதல் கட்டத்தைத் தான் எதிர்கொள்வோம், போகப்போக அதன் அழுத்தம் – பாதிப்பு – கஷ்டம் –மிக மோசமாகவும், தீவிரமாகவும் இருக்கும் என்று குறிப்பிட்டு வந்தோம்.

அது சரியே. இது பொருளாதார அழுத்தத்தின் –நெருக்குவாரத்தின் – ஆரம்ப நிலைதான். இனிப் போகப்போகத்தான் நிலைமையின் இக்கட்டு விபரீதமாக நமக்குப் புலப்படத் தொடங்கும்.

ஏற்கனவே இலங்கை நாணயத்தின் பெறுமதி தன் பாட்டில் மோசமாக வீழ்ச்சியுற்றமையினால் பொருள்களின் விலை பல மடங்கு எகிறி வருகின்றது. நாணயப் பெறுமதி வீழ்ச்சி எதிர்பார்க்கப்பட்டமையை விட மிக மோசமாக உள்ளது. இன்னும் சில தினங்களில் டொலரின் பெறுமதி 400 ரூபாவைத் தாண்டும்.

இதற்குள், நாடு மிக மோசமான பொருளாதார நிலைமையை எதிர் கொள்வதால் நாட்டின் விற்பனை வரியை உயர்த்துவதைத் தவிர வேறு வழியில்லை என புதிய நிதி அமைச்சர் அலி சப்றி தெரிவித்திருக்கின்றார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 2019இல் தாம் பதவிக்கு வந்த உடனேயே பெரிய பொருளாதார விற்பன்னர் – நிபுணர் – என்பதுபோல பெறுமதி சேர் வரியை 8 சதவீதமாக – பாதியாக – கண்மூடித்தனமாகக் குறைத்தார். அதனால் லாபமீட்டிய வர்த்தகர்கள் அதன் பயனை அடைந்து விட, நாடு பெரும் வருமான இழப்பைச் சந்தித்தது.

ஜனாதிபதியின் இந்த முடிவு அப்போது நடக்கவிருந்த பொதுத்தேர்தலில் மக்களின் வாக்குகளைச் சுருட்டிச் சூறையாடுவதற்கான சலுகை நடவடிக்கையாக இருந்ததே தவிர, நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் செயற்பாடாக இருக்கவில்லை.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், தான் அரசியல் ரீதியாக ஆதரவை திரட்டுவதற்காக – குறுகிய அரசியல் லாபம் அடைவதற்காக – தேசத்தின் பொருளாதாரத்தையே நாசமாக்கினார் இந்த ஜனாதிபதி. அதுதான் இந்தப் பொருளாதார நெருக்கடிக்கான ஆரம்பப்புள்ளி. அன்று எடுத்த அந்த முடிவைத் தவறு என புதிய நிதியமைச்சர் இப்போது ஒப்புக் கொள்கின்றார்.

நாட்டின் வருவாய் மற்றும் செலவின இடைவெளியை குறைத்து, நிலைமையைச் சமாளிப்பதற்காக பெறுமதி சேர் வரி இரண்டு மடங்காக்கப்பட வேண்டும் என்று அவர் கோடி காட்டியிருக்கின்றார். அந்த விகிதம் 13 முதல் 14 ஆக உயர்த்தப்பட வேண்டியிருக்கும் என்றார் அவர்.

இலங்கைக்குப் பொருளாதார உதவிகளை வழங்கி, நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் இங்கு வந்தால் இப்படித்தான் ஆகும், பலவரிகள் உயர்த்தப்படும், பொருளாதார நடவடிக்கைகள், விதிமுறைகள் அழுத்தமாக முன்னெடுக்கப்படும் என்பவையெல்லாம் எதிர்பார்க்கப்பட்டவைதான்.

இப்போது சர்வதேச நாணய நிதியம் காலடி எடுத்து வைக்க முன்னரே வரி உயர்வு பற்றிய அறிவிப்பு நிதி அமைச்சரிடம் இருந்து வந்து விட்டது. அவ்வளவுதான்.

ஆனால் அதிகரிக்கப்படவிருக்கும் புதிய வரி உயர்வுகளினால் பொருள்களின் விலைகள் மேலும் எகிறும். மக்கள் பாவம். பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக, அந்த நெருக்கடியை தினசரி வாழ்வில் எதிர்கொள்ள முடியாது மேலும் அந்தரிக்கப் போகின்றார்கள்.

## மே முதலாம் திகதியை துன்பியல் நாளாக அறிவித்தது தமிழர் ஆசிரியர் சங்கம்!

உலகத் தொழிலாளர் நாளாகிய மே 1ஐ துன்பியல் நாளாக அனுஷ்டிக்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. இது தொடர்பில் அது ஊடக அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

உலகத் தொழிலாளர் நாளாம் மே 1 உலகில் வாழும் ஒட்டுமொத்த தொழிலாளர்களின் எழுச்சி நாளாகும். இந்நாளில் தொழிலாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எழுச்சியை வெளிப்படுத்தும் நாளே மேதினம். இலங்கையில் வாழுகின்ற அத்தனை தொழிலாளர்களும் தற்போது வாழ்வதற்கு வழியின்றி வாழ்க்கைக்காகப் போராடுகின்றனர்.

ஆசிரியர்களின் அடிப்படைச் சம்பளமாக இரண்டு லட்சம் தந்தாலும் இன்றைய நிலையில் வாழ முடியாது. அது போன்று அத்தனை உழைப்பாளர்களும் அடுத்த வேளை உணவுக்கு அலையும் நிலை இன்று உருவாகியிருக்கின்றது. இந்த நிலைக்கு இலங்கையில் உள்ள அத்தனை அரசியல் கட்சி உறுப்பினர்களும் காரணம் என்பதை வலியுறுத்தி இளையோர் இன்று வீதியில் இறங்கியுள்ளனர்.

வருடந்தோறும் நாம் நடாத்தும் மேதின பேரணியாலோ, கூட்டங்களாலோ எதுவும் நடந்துவிடப் போவதில்லை. இது கடந்தகால வரலாறு.

இந்நாளை அரசியல்வாதிகளே தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றனர். இதுவே காலம் காலமாக நடைபெறுகின்றது.

இந்த வருடம் வரும் மே நாளை வாழ வழியில்லாத துக்கநாளாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பிரகடனப்படுத்துகின்றது.

ஒவ்வொரு அதிபரும், ஆசிரியரும் இந்நாளை துக்கநாளாகக் கருதி அவரவர் வீடுகளில் இருந்து பிரார்த்தனை செய்வோம் எனக் கேட்டுக்கொள்கின்றோம். இந்த வருடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எந்த மேதின ஊர்வலத்திலும் மேதின கூட்டங்களிலும் பங்குபற்றுவதில்லை எனத் தீர்மானித்துள்ளது.

நாடு சுபீட்சமடைந்து எமக்கு வாழ வழியேற்படுமாக இருந்தால் 2023 மே 1ஐ உலக தொழிலாளர் நாளாக எழுச்சியுடன் கொண்டாடுவோம். – என்று உள்ளது.

## அத்தியாவசிய சேவைகளுக்கே இனி எரிவாயு வழங்கப்படுமாம்!

### லிற்றோ நிறுவனம் அறிவிப்பு

நாடு தற்போது எதிர்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளும் வரை நகரங்களுக்கும் அத்தியாவசிய தேவைகளுக்கும் மட்டுமே எரிவாயு வழங்கப்படும் என முடிவு செய்யப்பட்டுள்ளதாக லிற்றோ நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தினசரி 80 ஆயிரம் சிலிண்டர்கள் வழங்கப்பட்டு வந்த நிலையில் தற்போது இந்த எண்ணிக்கை 30 ஆயிரம் ஆகக் குறைந்துள்ளது.

அத்துடன் தற்போது 27 சதவீதமான நுகர்வோர் மட்டுமே எரிவாயுவைப் பயன்படுத்துகிறார்கள்.

மேலும், தற்போதைய நாட்டின் நிலைமையை கருத்தில் கொண்டு, எரிவாயு தேவையை பூர்த்தி செய்ய மாதமொன்றுக்கு 3 கோடி அமெரிக்க டொலர்கள் தேவைப்படுகின்றன என அவர் தெரிவித்தமையுடன், நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் அர்ப் பணிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.



## கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரி நியமனம் வழங்கல்!

கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரி ஆசிரியர் பயிற்றுநர்களுக்கான நியமனம் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று (வெள்ளிக்கிழமை) காலை இடம்பெற்றது.

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் அதிபர் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் 355 ஆசிரியர்களுக்கான நியமனங்களை வடக்கு மாகாண பிரதம செயலாளர் சு.சமன் பந்துலசேன வழங்கி வைத்தார்.

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் தலைவர் எஸ்.பரமானந்தம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பல்வேறு பாடவிதானங்களை கொண்ட ஆசிரியர்களுக்கான நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டன. விவசாயம், கலை விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் மற்றும் சமயம் உள்ளிட்ட 18 வகையான பாடவிதானங்களை கற்பிக்கும் 355 டிப்ளோமா ஆசிரியர் பயிலுநர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வில் வடக்குமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர். வரதீஸ்வரன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார் மற்றும் கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## முதலை சாவு; மக்கள் அச்சம்

கிளிநொச்சி கல்மடுக்குளத்தில் இறந்த நிலையில் முதலை ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

முதலை இறந்து கரையொதுங்கியமையானது பொதுமக்கள் மத்தியில் அச்சநிலையை ஏற்படுத்தியுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர். இதுவரைகாலமும் இந்தக் குளத்தில் இது போன்ற முதலை இறப்பு சம்பவம் நடைபெறவில்லை எனவும், இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

# கொரோனா பரவலால் ஏற்பட்ட பொருளாதார தாக்கத்தில் இருந்து இந்தியா மீள 13 ஆண்டுகள் வரை ஆகலாம் என்கிறது ரிசர்வ் வங்கி






கொரோனாப் பரவலால் ஏற்பட்ட பொருளாதார தாக்கத்தில் இருந்து இந்தியா மீள்வதற்கு 13 ஆண்டுகள் வரை ஆகலாம் என்று ரிசர்வ் வங்கி தெரிவித்திருக்கிறது. கடந்த இரண்டு மாதங்களாக நம் இந்தியாவில் கொரோனாவின் பாதிப்பு சற்று குறைந்து காணப்பட்டது. ஆனால் திடீரென்று ஓரிரு வாரங்களாக கொரோனா அதிகரித்துள்ளது. தற்போது, தினசரி கொரோனா வைரஸ் பாதிப்பு எண்ணிக்கை இந்த வாரத்தில் மூன்றாவது முறையாக 3 ஆயிரத்தை கடந்து இருக்கிறது. கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப் பட்டவர்கள் எண்ணிக்கை 3 ஆயிரத்து 688 ஆகும். இந்நிலையில், இந்திய கரன்சி மற்றும் நிதி தொடர்பான ரிசர்வ் வங்கியின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதில், கடந்த 2021ஆம் ஆண்டில் மைனஸ் 6.6 சதவீதம் என்று பொருளாதார வளர்ச்சி பின்னடைவை சந்தித் ததை அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

2023ம் ஆண்டுக்கு பிறகு பொருளாதாரம் வருடத்திற்கு 7.5சதவீதம் வளர்ச்சி அடையும் என்று கருத்தில் கொண்டால் கொரோனா காலத்தில் சந்தித்த இழப்புகளை 2034 – 2035ம் ஆண்டில் தான் சரி செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பொருளாதார வளர்ச்சி அரசின் ஊக்க நடவடிக்கைகளை சார்ந்தே இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. அதேநேரம் உக்ரைனில் நடைபெற்று வரும் போர், பணவீக்கம் ஆகியவை புதிய சவால்களாக உருவாகியுள்ள தாகவும் கூறப்பட்டுள்ளது.

# ஹிந்தி பேச முடியாவிட்டால் நாட்டை விட்டு வெளியேறுமாறு அமைச்சர் ஆவேசம்



நடிகர் கிச்சா சுதீப், அஜய் தேவ்கன் இருவருக் கும் இடையில் ஹிந்தி மொழி குறித்து டுவிட்டர் தளத்தில் கருத்து மோதல் நடைபெற்றது. இதில் அஜய் தேவ்கன் இந்திதான் இந்தியாவின் தேசிய மொழி என்று கூறினார். இதற்கு கிச்சா சுதீப் ஹிந்தி மற்ற மொழிகளைப்போல இந்தியாவின் ஒரு மொழிதான் எனப் பதிலளித்தார். அஜய் தேவ்கனின் பேசுக்கு சுதீப் போலவே திரைப் பிரபலங்கள், அரசியல் தலைவர்கள் பலரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்த விவாதம் பெரிதாக எழுந்த நிலையில் பலரும் தங்களது கருத்துக் களை பரிமாறி வருகின்றனர். இந்த நிலையில் இந்திக்கு ஆதரவாக உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த அமைச்சர் ஷஞ்சய் நிஷாத் கருத்துத் தெரிவித்துள்ளார். நீங்கள் இந்தியாவில் வசிக்கிறீர்கள் என்றால் இந்தியை நேசிக்க வேண்டும். இல்லையெனில், நீங்கள் வெளி நாட்டவராகக் கருதப்படுவீர்கள். ஹிந்தி பேச முடியாவிட்டால் நாட்டை விட்டு வெளியேறி வேறு எங்காவது செல்லுங்கள், என்று சஞ்சய் நிாத் கூறியுள்ளார். இவரது கருத்துக்கும் தற்போது கடுமையான எதிர்ப்பு எழுந்துள்ளது.

# எரிபொருள் விநியோகத்தை ஜி.எஸ்.டிக்குள் உள்ளடக்க மாநிலங்கள் விரும்பவில்லையென அமைச்சர் கருத்து!




இந்திய மத்திய பெற்றோலியம் மற் றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச் சர் ஹர்தீப் சிங் பூரி, பெற்றோல், டீசல் விலையை கட்டுப்படுத்தும் நடவடிக் கையாக அதனை, ஜி.எஸ்.டிக்கு கீழ் கொண்டு வருவதை மகிழ்ச்சியுடன் நடை முறையாக்க மத்திய அரசு தயாராக இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்.

டெல்லியில் ஏ.என்.ஐ. செய்தி நிறுவத் திற்கு பேட்டி அளித்த அவர், மத்திய அரசு தயாராயிருந்தாலும், மாநிலங்கள் அதை ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் இல்லை என்பதுதான் உண்மை, என்றும் குறிப்பிட்டார்.

சுமைப் பகிர்வு சமமாக இருக்கத் தேவை யில்லை என்று கூறிய அவர், இந்த விவகாரத்தில் மத்திய அரசு தனது பொறுப்பை ஏற்றுக் கொண் டுள்ளது என்றும், அதேபோல், மாநில அரசுக ளும், பெற்றோல் மற்றும் டீசல் மீதான மதிப்பு கூட்டு வரிகளை குறைப்பது தொடர்பாக பொறுப் பெடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

ரஷ்யா – உக்ரைன் மோதல் எரிபொருள் விலையில் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளதாகவும், மசகு எண்ணெய் விலை பரலுக்கு 19.56 அமெ ரிக்க டொலரிலிருந்து 130 டொலராக உயர்ந்தது என்றும் அவர் குறிப்பிட்டார். பெற்றோல்–டீசல் மீது மத்திய அரசு 32 ரூபா கலால் வரி விதித்தது. எனினும், தீபாவளிக்கு முன்பு நாங்கள் அதைக் குறைத்தோம். விலைகள் குறைக்கப்பட்டன என்றும் அவர் கூறினார். எரிபொருள் மீது, பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் பா.ஜ.க. அல்லாத மாநிலங்களை விட பாதி அளவே வட் வரியை வசூலிக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார். பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் மற்றும் பா.ஜ.க. ஆட்சியில் இல்லாத மாநிலங்களுக்கு இடையே பெற்றோலுக்கான சில்லறை விலையில் 15 முதல் 20 ரூபா வரை வித்தியாசம் உள்ளதாகவும் மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி கூறியி ருக்கிறார்.



# எதிர்கால எரிபொருள் பசுமை ஹைட்ரஜன்; மத்திய அமைச்சர் நிதின் கட்கரி தகவல்

ஐதராபாத்தில் பெண்கள் அமைப்பு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்த ரங்கில் இந்திய மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ் சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி பங்கேற்று பேசி னார்.

பெல்றோல் விலை உயர்ந்த பொருளாகவும் அரிதானதாக வும் மாறி வருவது நாம் அனை வரும் அறிந்ததே. எங்களுக்கு மாற்று எரிபொருள்கள் தேவை. பயோடீசல், இயற்கை எரிவாயு, எதனால், மெதேன், புரொப் பேன், மின்சாரம், ஹைட்ரஜன் போன்ற மாற்று எரிபொருள் களைப் பற்றி என்னால் சிந் திக்க முடிகிறது. அவை தற் போது வளர்ச்சியில் உள்ளன.

சில எதிர்கால வாகனங்க ளுக்கு சக்தி அளிக்கும் வகை யில் அவை உற்பத்தியில் உள் ளன. சில இன்றும் கிடைக் கின்றன. பசுமை ஹைட்ரஜன் எதிர்கால எரிபொருளாகும். இந்த மாற்று எரிபொருள் குறித்து ஆராய்ச்சி செய்து மேம்படுத்துவதில் நாம் முன் னோடியாக இருப்பது மட்டுமல் லாமல், அவற்றை ஏராளமாக உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யவும் வேண்டும்.

2025ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை 5 டிரில்லியன் டொலர் பொருளாதாரம் கொண்ட நாடாக மாற்ற பிரதமர் மோடி ஒரு தொலைநோக்குப் பார்வையை முன் வைத்துள் ளார். இதை அடைய, நமக்குப் பொருத்தமான தொழிநுட் பங்கள், உற்பத்தித்திறன் அதி கரிப்பு மற்றும் ஏற்றுமதிகள் தேவை, என்று அமைச்சர் நிதின் கட்கரி தனது உரையில் கூறியுள்ளார்.



# நிலக்கரிப் பற்றாக்குறையைச் சீர்செய்ய 42 ரெயில்கள் காலவரையின்றி ரத்தாயின

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் 70 சதவீதம் நிலக்கரியில் இருந்து பெறப்படுகின்ற நிலையில், கோடையின் வெப்ப அலையால் மின் நுகர்வின் அளவும், மின்சாரத் தேவையும் அதிகரித்துள்ளன.

இந்தியா முழுவதும் நிலக்கரி பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளதால் மின் விநியோகத் தடை ஏற்பட்டு கடும் வெப்பத்திற்கு இடையே மக் களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைகிறது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் தொழிற்சாலை உற்பத்தியும் பாதிக் கப்பட்டுள்ளது.

இந்திய மின் உலைகளில் உள்ள நிலக்கரி இருப்பு இம்மாத தொடக்கத்திலேயே ஏறக்குறைய 17 சதவீதம் சரிவடைந்ததால், தேவையான அளவை விட மூன்றில் ஒரு பங்கு மட்டுமே உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நிலக்கரிப் பற்றாக்குறையால் சில தொழிற்சாலைகள் உற்பத்தியை குறைத்துள்ளன.

நிலக்கரி இருப்பு குறைந்துள்ளதாக என பல மாநிலங்கள் அபாயக்குரலெழுப்பி வருகின்றன.

இந்த நிலையில், அனல் மின் உலைகளுக்கு நிலக்கரி கொண்டு செல்வதற்காக 42 பயணிகள் ரயில்கள் நாடுமுழுவதும் ரத்துச் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் நிலக்கரியை கொண்டு செல்லும் சரக்கு ரெயில்கள் விரைவாகச் சென்று சேரும் என்றும் இதற்காக காலவரையின்றி ரயில்கள் ரத்துச் செய்யப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலக்கரியைக் கொண்டு செல்வதற்காக போர்க்காலச் சூழல் போன்று நட வடிக்கைகளை எடுக்க முயற்சித்து வருகிறோம், என ரயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# 'ஒரே நாடு – ஒரே சட்டம்' என்பது இங்கு இல்லை வடக்கு, கிழக்கில் மட்டும் ஓராயிரம் சட்டங்கள்!



## மட்டக்களப்பில் சிவராம் நினைவு நாளில் சாணக்கியன் உரை

இலங்கையில் ஒரே நாடு – ஒரே சட்டம் இல்லை. ஒரு நாடு நூறு சட்டங்கள். அதிலும் கிழக்கு, வடக்கைப் பொருத்தமட்டில் ஒரு நாடு ஓராயிரம் சட்டங்கள். தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள ஆர்ப்பாட்ட அலையைசிறுசிறுவிளையாட்டுகளைக் காட்டி கோட்டாபயவினால் நிறுத்த முடியாது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

நேற்றைய தினம் மட்டக்களப்பில் இடம்பெற்ற படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் தராகி சிவராம் அவர்களின் நினைவு நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

இன்றைய தினம் நாங்கள் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் தராகி சிவராம் அவர்களை நினைவுகூர்ந்து கொண்டிருக்கின்றோம். அவர் கொல்லப்பட்டு 17 வருடங்களின் பின்னராவது காலி முகத்திடலில் இடம்பெறும் போராட்டத்தில் அவரது கொலைக்கும், படுகொலை செய்யப்பட்ட ஏனைய ஊடகவியலாளர்களுக்கும் நீதி கோரி பதாதைகள் வைக்கப்பட்டன. ஆனால் பொலிஸாரினால் அண்மையில் அவை அகற்றப்பட்டிருந்தன.

கொழும்பில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும் போதும், நினைவேந்தல்கள் செய்யும் போதும் பொலிஸார் வந்து வீடியோ எடுப்பதை நாங்கள் ஒருபோதும் பார்த்ததில்லை. பொலிஸார் என்று கூறி அறியாதவர்கள் கூட வந்து போட்டோ எடுப்பதைக் காணவில்லை. ஆனால் இன்று மட்டக்களப்பில் ஊடகவியலாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியளாளர் ஒருவரின் நினைவு நிகழ்வில் ஊடகவியலாளர்களின் நடுவில் மறைந்திருந்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் வீடியோ எடுக்கின்றார்.

நாங்கள் இன்று படுகொலை செய்யப்பட்ட சிவராம் அவர்களுக்கு என்ன நடந்தது? அவரை யார் கொன்றார்கள்? அவருக்கான நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று கேட்கின்ற நிலையில் அவ்வாறு கோரும் ஊடகவியலாளர்களைப் பொலிஸார் வந்து வீடியோ எடுக்கின்றனர்.

முன்னர் பொலிஸார் வந்து சிறு சிறு கையடக்கத் தொலைபேசிகளில் வீடியோ எடுப்பார்கள். தற்போது விலைகூடிய கமராக்களை வைத்திருக்கின்றார்கள். மக்களுக்கு உண்ண, குடிக்க நாட்டில் பணம் இல்லாத நிலையில் பொலிஸாருக்கு பெறுமதியான கமராக்களை வாங்கிக் கொடுப்பதற்கு கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எங்கிருந்து பணம் வருகின்றதோ தெரியவில்லை.

இலங்கையில் ஒரு நாடு, ஒரு சட்டம் இல்லை. ஒரு நாட்டுக்குள் நூறு சட்டங்கள். அதிலும் கிழக்கு வடக்கைப் பொருத்தமட்டில் ஒரு நாடு, ஓராயிரம் சட்டங்கள். நாட்டில் தற்போது அனைத்து இடங்களிலும் அனைவரும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்கின்ற நிலையில் நேற்றைய தினம் ஆர்ப்பாட்டம் செய்தால் கைது செய்யும் முகமாக நீதிமன்றக் கட்டளையொன்று எனக்கு வழங்கப்பட்டுள்ளது. அதனை நாங்கள் நீதிமன்றத்தின் ஊடாகப் பார்த்துக் கொள்வோம்.

ஆனால், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள ஆர்ப்பாட்ட அலையை இவ்வாறான சிறு சிறு விளையாட்டுக்களைக் காட்டி கோட்டாபயவினால் நிறுத்த முடியாது. எனவே நான் மக்களிடம் கோரிக்கையொன்றை முன்வைக்கின்றேன். மட்டக்களப்பில் மாத்திரமல்ல நாடு பூராகவும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் சார்பாக மக்கள் அனைவரும் முன்நிற்க வேண்டும்.

சிவராம் அவர்களின் 18வது நினைவு நிகழ்வுக்கு முன்னராவது அவரது படுகொலைக்கான நீதி கிடைக்க அனைவரும் ஒருமித்து குரல் கொடுக்க வேண்டும். – என்று தெரிவித்தார்.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் யாசகர் சாவு; இருவர் படுகாயம்

## மாவடிச்சேனையில் அதிகாலை சம்பவம்

(எச்.எம்.எம்.பர்ஸான்)

மோட்டார்சைக்கிள் விபத்தில் யாசகர்(பிச்சைக்காரர்) ஒருவர் உயிரிழந்துள்ளார்எனவாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர். வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடிச்சேனை பிரதான வீதியில் நேற்று அதிகாலை 2 மணியளவில் நடைபெற்ற விபத்திலேயே யாசகர் ஒருவர் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நடக்க முடியாத நிலையில் வாழ்ந்து வந்த இந்த யாசகர் வீதியோரம் தூங்கிக் கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிள் ஒன்றில் பயணித்த மூன்று இளைஞர்கள் யாசகர் மீது மோதியுள்ளனர்.

மோட்டார் சைக்கிள் யாசகரின் தலைப் பகுதியில் ஏறியதில் யாசகர் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த ஓர் இளைஞன் தப்பிச் சென்றுள்ளமையுடன் இருவர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மரணமடைந்த 41 வயதுடைய யாசகரின் உடல் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டு, பிரேத பரிசோதனையின் பின்னர் உடல் நேற்று பிற்பகல் மூன்று மணியளவில் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவ் விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தமக்கு உயிர் அச்சுறுத்தல் என்று வியாழேந்திரன் பொலிஸில் புகார்



கடந்த 25 ஆம் திகதி இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் மட்டக்களப்பு வீட்டுக்கு முன்பாக பிள்ளையாரடி பிரதான வீதிப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது இராஜாங்க அமைச்சரின் பெயருக்கும், அவரது அமைச்சுப் பதவிக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் வார்த்தைப் பிரயோகங்கள் பயன்படுத்தப்பட்டமை மட்டுமல்லாமல் அவருக்கு உயிர் அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்செயலை முன்னெடுத்தவர்களுக்கு எதிராகத் தாம் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளார் என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக நேற்று மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துவிட்டு, ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் மேற்படி தகவலை வெளியிட்டார்.

அவர் இதன்போது மேலும் கருத்து தெரிவிக்கையில் –

கடந்த 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் என் வீட்டுக்கு முன்பாக இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் என்னைத் தொடர்பு படுத்தி உண்மைக்கு புறம்பான செய்திகளைக் கூறி, நான் வகித்து வரும் அமைச்சு பதவி குறித்துப் பதாகைகள் மூலம் காட்சிப்படுத்தி, ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டமை மட்டுமல்லாது என் உயிருக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமையினால் அவை எனக்கு உளரீதியான பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளன.

அதுமட்டுமல்லாது நீதி மன்றத்தில் ஒரு வழக்கு இடம்பெறும்போது உண்மைக்குப் புறம்பான விடயங்களை இவர்கள் திரிவுபடுத்தி வெளியிட்டு வருகின்றனர். இவர்களுக்கு எதிரான சகல ஆதாரங்களையும் வழக்கு தொடர்வதற்காக எழுத்து மூல ஆவணங்களாக மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் சமர்ப்பித்துள்ளேன். சம்பந்தப்பட்ட ஒவ்வொருவருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. – என இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் இதன்போது குறிப்பிட்டார்.

# ஓமான் நாட்டில் இலங்கை யுவதியின் சடலம் நல்லடக்கம்

(எச்.எம்.எம்.பர்ஸான்)

ஓமான் நாட்டில் மரணமடைந்த இலங்கைப் பெண்ணின் உடல் 19 நாள்களின் பின்னர் ஓமானில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதாக மரணமடைந்த பெண்ணின் உறவினர்கள் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிறைந்துறைச்சேனை பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய ஒரு பிள்ளையின் தாய் ஒருவரே ஓமான் நாட்டில் மரணமடைந்துள்ளார்.

ஓமான் நாட்டிற்குத் தொழில் நிமித்தம் நான்கு மாதங்களுக்கு முன்னர் சென்ற இவர் கடந்த 9 ஆம் திகதி அங்கு மரணமடைந்துள்ளார் என உறவினர்கள் மேலும் தெரிவித்தனர்.

திடீரென மரணமடைந்த பெண் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட ஓமான் நாட்டு பொலிஸார், வைத்திய பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களின் ஒப்புதலுடன் கடந்த 27ஆம் திகதி பெண்ணின் உடலை ஓமான் நாட்டில் நல்லடக்கம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மோ.சைக்கிள் திருட்டுச் சம்பவங்கள் சாய்ந்தமருதுப் பகுதியில் அதிகரிப்பு

சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் மோட்டார் சைக்கிள் திருட்டு சம்பவங்கள் அதிகரித்துள்ளமையால் பொதுமக்களை அவதானமாக இருக்குமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

சாய்ந்தமருது பிரதேசத்திலுள்ள கடற்கரையோரங்கள், தெருவோரங்கள், வீடுகள் மற்றும் கடை வாசல்கள், மைதானங்கள், பள்ளிவாசல்கள் உள்ளிட்ட பொது இடங்களில் நிறுத்தி வைக்கப்படும் மோட்டார் சைக்கிள்கள் அடிக்கடி இனந்தெரியாத நபர்களினால் களவாடப்பட்டு வருகின்றன என முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன என்று சாய்ந்தமருது பொலிஸார் தெரிவிக்கின்றனர். இத்திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் எனவும், தமது மோட்டார் சைக்கிள்களை உரிய முறையில் பூட்டிப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் எனவும், இத்திருட்டுச் சம்பவங்களைக் கண்டுபிடிக்கும் வகையில் பொலிஸாருக்குப் பூரண ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் எனவும் சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டு வருகிறது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு










# ஊடகவியலாளர்களான சிவராம் மற்றும் ரஜிவர்மன் ஆகியோரின் நினைவு தினம் யாழில் நடைபெற்றது!

கலையமுதன்

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களான சிவராம் மற்றும் ரஜிவர்மன் ஆகியோரின் நினைவு தினம் யாழ்.ஊடக அமையத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களான சிவராமனின் 17 ஆம் ஆண்டுநினைவுதினமும், ரஜீவர்மனின் 15 ஆம் ஆண்டு நினைவு தினமும் யாழ்.ஊடக அமையத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) மதியம் 12 மணியளவில் இடம்பெற்றன.

ஊடகவியலாளரான தராக்கி சிவராம் என்றழைக்கப்படும் தர்மரத்தினம் சிவராம் கடந்த 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி கொழும்பு பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் வைத்து வெள்ளை வானில் வந்த இனம் தெரியாதவர்களால் கடத்தப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்துக்கு அருகில் சடலமாக மீட்கப்பட்டார்.

ஊடகவியலாளரான செல்வராஜா ரஜிவர்மன் உதயன் பத்திரிகையின் அலுவலக செய்தியாளராகக் கடமையாற்றி வந்த வேளை கடந்த 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி காலை 10 மணியளவில் ஸ்ரான்லி வீதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத நபர்களால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

# இலங்கைக்கு வருகை தந்தார் பா.ஜ.க தலைவர் அண்ணாமலை!



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மே தினக் கூட்டத்தில் பிரதம அதிதியாக பங்கேற்கும் பொருட்டு பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் குப்புசாமி அண்ணாமலை இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.


இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மே தினக் கூட்டம் கொட்டக்கலை சி.எல்.எப் வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் இலங்கைக்கு வருகை தந்த தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை முதலில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயைச் சந்தித்துள்ளார்.

தொடர்ந்து மலையகத்துக்குச் செல்றஅவர் அங்கு பல்வேறு பகுதிகளுக்கும் கள விஜயம் மேற்கொள்கிறார்.

இதன்போது இ.தொ.க.வின் தலைவர் செந்தில் தொண்டமான் உள்ளிட்டவர்கள் இணைந்துகொள்கின்றார்.

பின்னர், மே தினக் கூட்டத்தை நிறைவு செய்து கொண்டு அண்ணாமலை வடக்கிற்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





தந்தை செல்வா நினைவு தினமான கடந்த செவ்வாய்க்கிழமை தந்தை செல்வா நினைவிடத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நல்லூர்த் தொகுதிக் கிளையின் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சீ.வீ.கே. சிவஞானம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இணைப் பொருளாளரும் நல்லூர்த் தொகுதிக் கிளையின் செயலாளருமான பொ.கனகசபாபதி மற்றும் கிளை உறுப்பினர்கள் மலர் தூபி அஞ்சலி செலுத்துவதை முதலாவது படத்திலும், மாவிட்டபுர கந்தசுவாமி ஆலயத்தில் தந்தை செல்வாவுக்கு அர்ச்சனை செய்து வழிபடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். அவர்களுடன் ஆலயக் குருக்களும் தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்களும் காணப்படுகின்றனர்.

## அதிகாித்தது மருந்துகளின் விலைகள் அதிவிசேட வர்த்தமானியும் வெளியானது

மருந்துகளின் விலைகளை அதிகரித்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியாகியுள்ளது.

60 வகையான மருந்துகளின் விலைகளை 40 சதவீத்தால் அதிகரித்து, சுகாதார அமைச்சர் சன்ன ஜயசுமனவினால் அதிவிசேட வர்த்தமானியொன்று வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, 500 மில்லிகிராம் பரசிட்டமோல் மாத்திரையின் விலை 4 ரூபா 46 சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இரத்த அழுத்தம் மற்றும் கௌஸ்ரோல் போன்றவற்றுக்குப் பயன்படுத்தப்படும் மாத்திரைகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

## உள்நாட்டு கடன்கள் தொடர்பில் முக்கிய அறிவிப்பை வெளியிட்டது மத்திய வங்கி!

அரசாங்கத்தால் உள்நாட்டில் பெறப்பட்ட கடன்களை திறைசேரி உண்டியல்கள் மற்றும் இலங்கை அபிவிருத்தி பத்திரங்கள் என மறுசீரமைக்கும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வர்த்தக சம்மேளனக் கூட்டத்தில் உரையாற்றும் போதே மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பதே இலங்கை அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாகும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள இலங்கைக்கு தமிழக அரசு உதவி!



நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள இலங்கை மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்கு மத்திய அரசிடம் அனுமதிகோரி தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தமிழ் நாடு சட்டபேர வையில் முன்வைக்கப்பட்ட தனிநபர் தீர்மானம் நிறை வேற்றப் பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தை முன்வைத்து உரையாற்றிய மு.க.ஸ்டாலின் தமிழக அரசு இலங்கை மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவிகளை வழங்க முன் வந்துள்ளதாகக்குறிப்பிட்டார்.

இதற்கமைய, 80 கோடி ரூபா பெறுமதியான 40 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி, 137 மருந்துப்பொருள்கள் (28 கோடி ரூபா) மற்றும் குழந்தைகளுக்காக 500 தொன் பால்மா (15 கோடி ரூபா) என்பவற்றை வழங்கத் தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

இவற்றைத் தமிழக மாநில அரசால் நேரடியாக வழங்க முடியாது என்பதால், இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் ஊடாக வழங்கிவைக்க மத்திய அரச அனுமதி வழங்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.04.2022இல் வெளியிடப்பெற்றது.